# ‘சிக்கன மருத்துவ சிகிச்சை தேவை’

மருத்துவ சிகிச்சைச் செலவுகள் அதிகரித்து வரும் நிலையில், குறைந்த வருமான குடும்பங் களுக்கு சிக்கனமான பல்வேறு சிகிச்சை முறைகள் பற்றி ஆராய வேண்டியுள்ளது என்று மனித வள அமைச்சர் டான் சி லெங் கூறியுள்ளார். தொழில்நுட்ப மேம் பாட்டுக்கு மட்டுமின்றி, குறைந்த வருமான பிரிவினருக்கு சிக்கன மான, எளிதில் சென்றடையக் கூடிய பராமரிப்பு, ஆதரவு சேவை களுக்கும் ஆய்வு, புத்தாக்கத் தேவை உள்ளது என்றார் அவர். டியூக் -என்யுஎஸ் மருத்துவக் கல்லூரியின் பட்டமளிப்பு விழா வில் நேற்றுப் பங்கேற்றுப் பேசிய போது அவர் இதனைக்கூறினார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.